428—

கன்னிசேரி-சிவகாசி நெடுஞ்சாலையில் மேம்பாலம் கட்டுதல்

*** *35634*** திரு. *சஞ்சய் ராமசாமி:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, கன்னிசேரி-சிவகாசி நெடுஞ்சாலையில் கன்னிசேரிக்கு அருகாமையில் கி.மீ.0/2-ல் அர்ச்சுனா நதியில் ஆற்று மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)* : தற்போது அத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரிலிருந்து சிவகாசிக்கு கன்னிசேரி வழியாகச் செல்லவேண்டும் என்றால், அங்கே அந்த அர்ச்சுனா நதியைத் தாண்டித்தான் போக வேண்டும். இன்றைக்கு அந்த அர்சுனா நதியைத் தாண்டி அந்த வழியாக விருதுநகரிலிருந்து சிவகாசிக்குச் சென்றால் கிட்டத்தட்ட 15 கிலோமீட்டர் தூரம் குறையும். அதுமட்டுமல்ல, அங்கே கிட்டத்தட்ட 50 கிராமங்களில் உள்ள மக்கள் அந்த இடத்தில் ஒரு பாலம் கட்டினால் அதனால் பயனடைவார்கள். ஏனென்றால், அங்கே அந்தக் கிராமத்தில் இருக்கின்ற குழந்தைகள் எல்லாம் பள்ளிக்கூடத்திற்குச் செல்லவேண்டுமென்றாலும், வேலை செய்கின்றவர்கள் சிவகாசிக்குச் செல்ல வேண்டுமென்றாலும் சுலபமாக அந்த வழியாகச் செல்ல முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தவிதமான திட்டமும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். தயவு செய்து இதை மீண்டும் பரிசீலனை செய்து புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இல்லை என்ற பேச்சுக்கே இடம் இல்லாத ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டித் தருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 25]

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விருதுநகரைப் பொறுத்தவரையில் ஏற்கனவே ஒரு பெரிய பாலம் கட்டுவதற்காக ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அதைத்தவிர ரயில்வே மேம்பாலம் ஒன்று கட்டுவதற்கும் நம்முடைய அரசின் பரிசீலனையில் இன்றைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதற்கான பதிலை நான் சட்டமன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். ஆக ஒரு சட்டமன்ற தொகுதியைப் பொறுத்தவரையில் பல கோடிக்கணக்கான ரூபாயை உள்ளடக்கிய திட்டங்களை ஒரு ஆண்டு காலத்திலே அல்லது இரண்டு ஆண்டு காலத்திலே நிறைவேற்றுவது என்பது ஒரு சாத்தியமாக இருக்காது. ஏன் என்று சொன்னால் 234 தொகுதிகளிலும் இது போன்ற பல்வேறு பிரச்சினைகள் காலம் காலமாக இருக்கின்றன. அந்த அடிப்படையில் தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சஞ்சய் ராமசாமி தொகுதியில் மிகப்பெரிய திட்டங்கள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாலத்தைப் பொறுத்தவரையில் இதைக் கட்டுவதற்கு ஏறத்தாழ ஒரு கோடியே 15 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. 10 லட்சம், 15 லட்சம், 20 லட்சம் ரூபாய் என்று சொன்னால் எப்படியாவது நிதி ஆதாரம் திரட்டி செய்ய முடியும். ஆனால் இதற்குப் போவதற்கு வழி இருக்கிறது. குறுக்கே செல்லலாம். இதைக் கட்டுவது என்ற காரணத்தால் 10,15 கிலோ மீட்டர் சேவ் செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் இது ஒரு அவசியமான பாலம் தான் என்றாலும் கூட, இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் நான் சொன்னது போல 115 லட்சம் அல்ல, ஒரு கோடியே 65 லட்சம். ரூ. 115 லட்சம் அல்ல ஒரு கோடியே 65 ரூபாய் லட்சம் தேவைப்படுகிறது. ஆகவே, இதுபோன்ற பெரிய திட்டங்களை எல்லாம் எடுத்துக் கொள்வதற்கு சாத்திய கூறுகள் இல்லாமல் இருக்கிறது. ஆகவே எதிர்காலத்தில் இதுபற்றி பரிசீலிக்கலாம். தற்போது இது சம்பந்தமான ஆய்வு அரசிடத்தில் இல்லை. இருந்தாலும் அதற்கான வழிமுறைகளை நாம் ஆராய்ந்து எஸ்டிமேட் எல்லாம் போட்டு தயாராக வைத்துக் கொள்ளலாம், எப்போது பணம் வருகிறதோ; சூழ்நிலை சாதகமாக இருக்கிறதோ; அந்த நேரத்தில் இது போன்றவற்றை முன்னுரிமை கொடுத்து பரிசீலிக்கலாம் என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்.

[1995 ஏப்ரல் 25

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியிலிருந்து விருதுநகருக்கு மிகக் குறுகிய தூரத்தில் செல்வதற்கு அந்தப் பாலம் பயன்படும். அதோடு மட்டுமல்லாமல் டி. சேடப்பட்டி என்ற அந்த கன்னிச்சேரி ஊரில் தான் ஆண்டுதோறும் பெரிய அளவுக்கு தமிழகத்திலேயே பெரிய அளவுக்கு மாட்டுச் சந்தை அங்கே நடந்து வருகிறது. எனவே அந்தப் பாலத்தை அட்லீஸ்ட் ஒரு தரைமட்ட பாலமாவது போடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் தரைமட்டப் பாலம் அமைத்தால் பெரும் வெள்ளக்காலங்களில் அது அடிப்பட்டுப் போகிறது. அந்தப் பணம் வீணாகிவிடுகிறது. சில நதிகளில் வெள்ளம் வருகின்றபோது காட்டாற்று வெள்ளம் போல் கரை புரண்டு ஓடுகின்ற நேரத்தில் அந்த வெள்ளத் தன்மையைக் கணக்கிட்டுதான் சில இடங்களில் தரைமட்டப் பாலத்தை அமைக்கிறோம். ஒரு ஓடையாக இருந்தால் பரவாயில்லை, வெள்ளம் அதிகமாக வருகின்ற இடங்களில் தரைப்பாலம் அமைக்கின்ற போது திடீரென்று வெள்ளம் வந்து விட்டால் அதிலே 30 லட்சம், 40 லட்சம் செலவு செய்து நிதி குறைவாக செலவாகிறது என்ற காரணத்தால் கட்டி விட்டால் அது ஒரு தடவையிலே அடித்துப் போய்விடும். பணம் நஷ்டம் ஆகிவிடுகிறது. ஆகவே தான் வெள்ளம் அதிகமாக வருகின்ற பகுதிகளில் நாம் கணக்கில் எடுக்கின்றபோது உயர்மட்டப் பாலமாகக் கட்டவேண்டுமென்று நாம் நினைக்கிறோம். ஆகவே, ஒரு பர்மனென்ட் செக்டாராக இருக்கவேண்டும். காலம் காலமாக 100 ஆண்டு காலம் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் தான் அப்படி செலவழிக்கின்ற பணம் முறையாக செலவழிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தான் இதுபோல் 165 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்று நான் சொன்னேன். சந்தைக்கு மாடு வாங்குவதற்கு குறுக்கே நடந்து போகலாம். அதைப்பற்றிக் கவலை இல்லை. போக்குவரத்துப் பிரச்சினை தான் இங்கே எழுகிறதே தவிர சந்தையில் மாடு வாங்குகிறவர்கள் எல்லாம் நடந்து தான் மாடுகளை பிடித்துக் கொண்டு வருவார்கள். ஆகவே அதிலே பிரச்சினை இல்லை. சுற்றிப் போக வேண்டியிருக்கிறது. இந்தப் பாலம் இல்லாததால் 10 கிலோ மீட்டர் சுற்றிப் போக வேண்டியிருக்கிறது. போக்குவரத்து வசதி ஒன்றும் அதற்கு இல்லாமல் இல்லை. ஆகவே நல்ல ரோடு வசதி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகங்காதரன் அவர்களுக்கு நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் விருதுநகருக்கு ஒரு கோடிக்கு மேல் செலவு செய்து இரு வழி சாலை போட்டு இருக்கிறோம். ஆகவே பணிகள்

நிறைய நடைபெற்று இருக்கின்றன. விருதுநகருக்கும் சிவகாசிக்கும் போனால் ஒரு நேஷனல் ஹைவேஸ் ரோட்டில் போவது போன்ற உணர்வு இருக்கிறது. ஆகவே வெகு சீக்கிரமாக திரு. பாலகங்காதரன் அவர்கள் கலெக்டர் ஆபிஸ்க்கு எல்லாம் வந்து விடுகிறார். ஒரு மணி நேரத்தில் வருபவர் 20 நிமிடத்தில் வருகிறார். ஆகவே அந்தப்பகுதியில் நிறையப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இருக்கிற பிரச்சினை எலலாம் பணப்பிரச்சினை காரணமாகத் தான், நிதிப் பிரச்சினைக் காரணமாகத்தான் அவைகளை எல்லாம் பெரிய திட்டங்களை எல்லாம் உடனே எடுக்க முடியவில்லை. இருந்தாலும் இந்த சூழ்நிலையைக் கருதி எதிர்காலத்தில் பகுதி-2 திட்டம் அல்லது ஏதாவது. உலக வங்கியிடமிருந்து வருகிற திட்டம் இதுபோன்ற திட்டங்களில் அரசு பரிசீலிக்கும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 429, டாக்டர் பீட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

429—

ESTABLISHMENT OF RENTAL COLONIES THROUGHOUT THE STATE

*** 22881—Dr. Beatrix D'souza:**

Will the Hon. the Minister for Housing and Urban Development be pleased to State—

Whether there is a proposal with the Government to set up senior citizens rental colonies Throughout the State?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 10.35

Dr. BEATRIX D' SOUZA: Hon. Speaker, Sir, Countries around the world are now witnessing a population boom. Though the birth rate is falling, the population has been increasing right from the `seventies. Obviously, there is no problem for the rich people because they have their own houses. The poor